

கலைஞர் 100 1924 - 2024

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 154 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – மார்கழி 29 – செவ்வாய்க்கிழமை 13 ஜனவரி 2026 – சென்னை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 154 : Thiruvalluvar Year - 2056 - Margazhi 29 - Tuesday 13 January 2026 - Chennai 16 Pages ₹ 5.00


## நாடுகளும் கடல்களும் நம்மைப் பிரித்தாலும்

# மொழியும் இனமும் உணர்வால் நம்மை இணைக்கிறது!

## ‘அயலகத் தமிழர் தினம் – 2026’ விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.1.2026) நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற அயலகத் தமிழர் தினம் – 2026 விழாவில், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை மற்றும் தமிழ் இணையக் கல்விக் கழகம் இணைந்து செயல்படுத்தும் தமிழ் மணம் திட்டத்தின் கீழ் அயலகத் தமிழ் குழந்தைகளுக்குத் தமிழ் கற்பிக்க தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஆசிரியர்கள் – திருமதி பிரியா கிருஷ்ணன் (இந்தோனேசியா), திருமதி அனிதா (இந்தோனேசியா), திருமதி சுப்புலெட்சுமி வீரபத்திரன் (இந்தோனேசியா), திருமதி ஜெனிபர் டிக்னா (இந்தோனேசியா), திருமதி உமாராணி (சிஷெல்ஸ்), திருமதி இந்திரா (தான்சானியா), திருமதி நந்தினி சிராஜுதின் (ஃபிஜி), திருமதி செல்வமுத்துமாரி (ஃபிஜி), விஜயகுமார் (உகாண்டா) மற்றும் செல்வி ஜெயந்தமலர் (மாலாவி) ஆகியோருக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இவ்விழாவில், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பொதுத் துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**சென்னை, ஜன. 13 -**

**“நாடுகளும் கடல்களும் நம்மைப் பிரித்தாலும் மொழியும் இனமும் உணர்வால் நம்மை இணைக்கிறது” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ‘அயலகத் தமிழர் தினம் - 2026’ விழாவில் உரையாற்றும் போது பெருமிதத்துடன் கூறினார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.1.2026) சென்னை, நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை சார்பில் நடைபெற்ற “அயலகத் தமிழர் தினம் – 2026” விழாவில், அயலகத் தமிழர்களுக்கு விருதுகளை வழங்கி, ஆற்றிய உரை வருமாறு:-

அயலகத் தமிழர் தினம் 2026 விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கக் கூடிய உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

தாய் மண்ணான தமிழ் மண்ணிற்கு வந்திருக்கக்கூடிய உங்கள் எல்லோருக்கும் அயலகத் தமிழர் நாள் வாழ்த்துகளைச் சொல்லி, புத்தாண்டு வாழ்த்துகளையும், தமிழர் திருநாளாம் பொங்கல் வாழ்த்துகளையும் சொல்லி, வருக! வருக! வருக! என வரவேற்கிறேன்!

தமிழ்நாட்டின் முதலமைச்சராக மட்டுமல்ல, உங்களின் உடன்பிறப்பாக நான் வரவேற்க கடமைப்பட்டிருக்கிறேன். உலகின் பல நாடுகளிலும், இந்தியாவின் மற்ற மாநிலங்களிலும், தமிழர்களான நீங்களும், உங்களின் குடும்பத்தாரும், பல முக்கிய பொறுப்புகளிலும், நல்ல நிலையிலும் இருப்பதை நினைத்து நான் பெருமைப்படுகிறேன்! மகிழ்ச்சி அடைகிறேன்!

**யாராலும் பிரிக்க முடியாத தமிழினச் சொந்தங்கள்!**

ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதம் நீங்கள் எல்லோரும், உங்கள் சொந்தங்களைப் பார்க்க தமிழ்நாட்டிற்கு வருகிறீர்கள். நாம் எல்லோரும் எதனாலும், யாராலும் பிரிக்க முடியாத தமிழ்ச் சொந்தங்கள்! தமிழினச் சொந்தங்கள்! இது பல்லாயிரம் ஆண்டு காலத்து சொந்தம். இன்னும் பலப்பல ஆண்டு தொடர இருக்கின்ற சொந்தம். நாடுகளும், கடல்களும் நம்மைப் பிரித்தாலும், மொழியும், இனமும் நம்மை உணர்வால் இணைக்கிறது!

70 நாடுகளில் இருந்தும், இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் இருந்தும் நீங்கள் அனைவரும் வந்திருக்கிறீர்கள். தமிழர் திருநாளாம் பொங்கல் நேரத்தில் இந்த மாபெரும் தமிழர் ஒன்று கூடக்கூடிய மக்கள் கடலை சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கிறீர்கள். ஏற்பாடு செய்திருக்கக்கூடிய அயலகத் தமிழர் நலத் துறை அமைச்சர் நாசர் அவர்களுக்கும், துறை அதிகாரிகளுக்கும் என்னுடைய பாராட்டுகள்! வாழ்த்துகள்!

நம்முடைய நாசர் அவர்களைப் பற்றி சொல்ல வேண்டும் என்றால், கொஞ்சம் சத்தமிடுவார்! ஆனால் வேலை நடைபெறும். ஒரு வேலையை அவரிடத்தில் ஒப்படைத்தால், நாம் எதிர்பார்த்ததை விட சிறப்பாக செய்யக்கூடிய ஆற்றல் பெற்றவர் நம்முடைய நாசர் அவர்கள். நேற்றிலிருந்து நிகழ்ச்சியைப் பற்றி நீங்கள் கொடுத்த பேட்டியை பார்த்து, நாசர் தன்னுடைய பணியை சிறப்பாக செய்து ‘ப்ரூவ்’ செய்துவிட்டார்.

நூற்றாண்டுகளுக்கு முன் தங்களின் தாய் மண்ணான தமிழ்நாட்டில் இருந்து, பல்வேறு காரணங்களுக்காக, வாய்ப்புகளுக்காக பறந்து சென்றவர்கள் உங்கள் முன்னோர்கள். அவர்களை வாழ்க்கை தேடிச் சென்றவர்கள் என்று சொல்வதைவிட, அந்தந்த நாடுகளை வளப்படுத்த சென்றவர்கள் என்று சொல்வது தான் பொருத்தமாக இருக்கும். தாங்களும் வளர்ந்து, தங்களின் உழைப்பால் அந்த நாட்டையும் வளப்படுத்தி இருக்கிறார்கள். அதற்கு சிறந்த சான்று நீங்கள்தான்! வெளிநாட்டில் வாழ்ந்தாலும், தமிழ்நாட்டை மறக்காதவர்களாக நீங்கள் இருக்கிறீர்கள். அதனால்தான், தமிழ்நாட்டில் வாழும் தமிழர்களுக்கு நன்மை செய்வதை போலவே, அயல்நாட்டுத் தமிழர்களுக்கும் சகோதரனாக இருந்து நம்முடைய திராவிட மாடல் அரசு செயல்பட்டுக் கொண்டு வருகிறது.

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

### சிறப்பாகச் செயல்படக் கூடிய ஆற்றல் படைத்தவர் அமைச்சர் நாசர்!



**நம்முடைய நாசர் அவர்களைப் பற்றி சொல்ல வேண்டும் என்றால், கொஞ்சம் சத்தமிடுவார்! ஆனால் வேலை நடைபெறும். ஒரு வேலையை அவரிடத்தில் ஒப்படைத்தால், நாம் எதிர்பார்த்ததை விட சிறப்பாக செய்யக்கூடிய ஆற்றல் பெற்றவர் நம்முடைய நாசர் அவர்கள். நேற்றிலிருந்து நிகழ்ச்சியைப் பற்றி நீங்கள் கொடுத்த பேட்டியை பார்த்து, நாசர் தன்னுடைய பணியை சிறப்பாக செய்து ‘ப்ரூவ்’ செய்துவிட்டார்.**

---

### வார விடுமுறையையொட்டி களை கட்டிய கன்னியாகுமரி!

*கன்னியாகுமரி, ஜன. 13-*

*வார விடுமுறையின் கடைசி நாளையொட்டி கன்னியாகுமரியில் காலையில் இருந்தே அதிகளவில் சுற்றுலா பயணிகள் குவிந்தனர்.*



*அதைத்தொடர்ந்து காலை 8 மணி ஆனதும் சுற்றுலா பயணிகளின் கவனம் பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழகம் நோக்கி திரும்பியது. கடலின் நடுவே உள்ள விவேகானந்தர் மண்டபம், திருவள்ளுவர் சிலை, கண்ணாடி பாலத்தை கண்டுகளிக்க படகில் செல்ல டிக்கெட் எடுக்க பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழக வளாகத்தில் நீண்ட வரிசையில் காத்திருந்தனர்.*

*பின்னர் டிக்கெட் எடுத்து படகில் விவேகானந்தர் மண்டபம், கண்ணாடி பாலம், திருவள்ளுவர் சிலை பகுதிகளுக்குச் சென்று சுற்றிபார்த்தனர்.*

---

பொங்கல் சிறப்பு பேருந்துகளில்

### 2 நாளில் 2.50 லட்சம் பேர் பயணம்!

*சென்னை, ஜன. 13 -*

*பொங்கல் சிறப்பு பேருந்துகளில் இரண்டு நாட்களில் 2.47 லட்சம் பேர் பயணம் செய்துள்ளதாக போக்குவரத்துத் துறை தெரிவித்துள்ளது. பொங்கல் பண்டிகையை கொண்டாட சொந்த ஊர்களுக்குச் செல்லும் மக்களுக்காக ஆண்டுதோறும் தமிழக அரசு சார்பில் சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும்.*

*இந்த பேருந்துகளில் 1 லட்சத்து 26,180 பயணிகள் பயணம் மேற்கொண்டுள்ளனர், கடந்த ஜன.9 மற்றும் 10 ஆகிய 2 நாட்களில் மொத்தம் 5,510 பேருந்துகள் இயக்கப்பட்டு, 2 லட்சத்து 47,180 பயணிகள் பயணம் மேற்கொண்டதாக போக்குவரத்துத் துறை தெரிவித்துள்ளது.*

*இதுவரை சென்னையிலிருந்து 2 லட்சத்து 18,900 பயணிகள் முன்பதிவு செய்துள்ளதாக போக்குவரத்துத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.*

---

ராக்கெட்டின் 3வது நிலையில் தொழில்நுட்பக் கோளாறு!

### பி.எஸ்.எல்.வி. சி62 ராக்கெட் திட்டம் தோல்வி!

#### இஸ்ரோ அறிவிப்பு !



*ஸ்ரீஹரிகோட்டா, ஜன. 13 -*

*பி.எஸ்.எல்.வி சி62 ராக்கெட் திட்டம் தோல்வியடைந்துவிட்டதாக இஸ்ரோ அறிவித்துள்ளது. ராக்கெட்டின் 3வது நிலையில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கொளாறு காரணமாக அது கட்டுப்பாட்டை இழந்ததாகவும் இஸ்ரோ தெரிவித்துள்ளது.*

*பி.எஸ்.எல்.விசி62 ராக்கெட் நேற்று காலை 10:17 மணிக்கு ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து விண்ணில் ஏவப்பட்டது. இதன் மூலம் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பால் உருவாக்கப்பட்ட மேம்பட்ட புவி கண்காணிப்புஹைப்பர் ஸ்பெக்ட்ரல் செயற்கைக் கோள் மற்றும் ஸ்பெயின், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த 14 செயற்கைக்கோள்களையும் இந்த ராக்கெட் சுமந்து சென்றது. ராக்கெட்டின் முதல் 2 நிலைகளும் திட்டமிட்டபடி செயல்பட்டன.*

*ஆனால், ராக்கெட் ஏவுப்பட்ட 380வது விநாடியில் அதன் 3வது நிலையில் தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டதாகவும், இதனால், ராக்கெட் திட்டமிட்ட பாதையில் இருந்து விலகிச் சென்றதாகவும் இஸ்ரோ தெரிவித்துள்ளது. ராக்கெட்டின் செயல்பாடுகள் குறித்து தரவுகள் கிடைத்ததும், இத்திட்டம் தோல்வி அடைந்ததற்கான காரணங்கள் தெரியவரும் எனவும் இஸ்ரோ தலைவர் நாராயணன் தெரிவித்துள்ளார்.*

---

நாட்டின் வரலாற்றை மாற்றி எழுதி

## மதச்சார்பின்மையை தகர்ப்பதே ஒன்றிய அரசின் நோக்கம்!

### கேரள முதல்வர் பினராயி விஜயன் கண்டனம்!

திருவனந்தபுரம், ஜன. 13-

மதச்சார்பின்மை என்ற கோட்டையை தகர்ப்பதே பா.ஜ.க. மற்றும் ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் நோக்கம் என்றும், நாட்டின் வரலாற்றை மாற்றி எழுதுவதற்காக நீண்ட கால திட்டத்தை செயல்படுத்தி வருவதாகவும் கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்கள் தெரிவித்துள்ளார்.



ஒன்றிய அரசின் மக்கள் விரோத கொள்கைகளைக் கண்டித்து, கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் திருவனந்தபுரத்தில் உள்ள தியாகிகள் நினைவிடத்தில் உண்ணாவிரதப் போராட்டம் மேற்கொண்டுள்ளார். அப்போது பேசிய அவர், “ஒன்றிய அரசு ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் கண்ணோட்டத்திற்கு ஏற்ப செயல்பட்டு வருவதாக குற்றம்சாட்டினார். பல ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தவாதிகள், அரசின் முக்கிய பதவிகளை வகித்து வருவதாகவும், சங் பரிவார் சக்திகளின் பிரதிநிதிகள், பல்கலைக்கழகங்களில் நேரடியாக நியமிக்கப்படுவதாக” தெரிவித்தார்.

நமது கல்வி நிறுவனங்கள் மதச்சார்பின்மையின் கோட்டைகளாக திகழ்வதாகவும், அதனை தகர்ப்பதே அவர்களது நோக்கம் என்றும் தெரிவித்தார். மகாத்மா காந்தி யார் என்பதையோ, சுதந்திர போராட்டம் குறித்தோ மாணவர்கள் தெரிந்துகொள்ள அவர்கள் விரும்பவில்லை என்று அவர் தெரிவித்தார்.

பிரிட்டிஷாரின் ஆதரவை யார் நாடினார்கள், சிறையிலிருந்து யார் கருணை மனுக்கள் எழுதினார்கள் போன்ற உண்மைகளை அழித்து, போலியான வரலாற்றை எழுதி, புனையப்பட்ட ஒரு கடந்த காலத்தைக் கற்பிப்பதே அவர்களின் முயற்சி என்றும் பினராயி விஜயன் சாடினார்.

---

### 6 முதல் 12ம் வகுப்புகளுக்கு பாடத்திட்டம்: கருத்துக் கேட்பு!

சென்னை, ஜன. 13 –

தமிழ்நாடு அரசு மாநிலக் கல்விக் கொள்கை 2025ன்படி 6 முதல் 12ம் வகுப்புகளுக்கான கலைத்திட்டம் மற்றும் பாடத்திட்டங்களை மாற்றியமைத்தல் பணியினை மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் செய்து வருகிறது. இதனை நடைமுறைப்படுத்தும் வகையில், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் தலைமையில் கலைத்திட்ட உயர்மட்ட வல்லுநர்குழு உறுப்பினர்களுக்கான முதற்கட்ட ஆலோசனைக் கூட்டம் கடந்த நவம்பர் 24ம் தேதி அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடந்தது.

இதை தொடர்ந்து, கலைத்திட்ட வடிவமைப்புக் குழு தலைவர் சுல்தான் அகமது இஸ்மாயில் தலைமையில் கலைத்திட்ட உறுப்பினர்களுக்கான ஆலோசனை கூட்டம் கடந்த டிசம்பர் 11ம் தேதி மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் நடந்தது. இதன் தொடர்ச்சியாக 1 முதல் 5ம் வகுப்புகளுக்கான தமிழ், ஆங்கிலம், கணிதம், சூழ்நிலையியல், அறிவியல் மற்றும் சமூக அறிவியல் ஆகிய பாடங்களுக்கான வரைவுப் பாடத்திட்டங்கள் உருவாக்கப்பட்டு பொதுமக்களின் கருத்துக்கேட்பிற்காக இணையதளத்தில் கடந்த 6ம் தேதி பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.